RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-5 இதழ்- 208 ஆகஸ்டு.3 2026 திங்கள்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# நீட் எதிர்ப்பு போராட்டம்; மாணவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகள் ரத்து : அமைச்சர் ராஜ்மோகன்

சென்னை: ஆக.3- நீட் தேர்வை எதிர்த்து போராடிய தமிழக மாணவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட அனைத்து வழக்குகளும் ரத்து செய்யப்பட்டுள்ளதாக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் தெரிவித்துள்ளார்.

நீட் தேர்வு வினாத்தாள் கசிவு மற்றும் முறைகேடுகளுக்குப் பொறுப்பேற்று மத்திய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும், நீட் தேர்வு முறைகேடு மற்றும் வினாத்தாள் கசிவு காரணமாக மன உளைச்சலுக்கு ஆளாகி உயிரிழந்த சுமார் 20 மாணவர்களின் குடும்பங்களுக்கு தலா 1 கோடி ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி டெல்லியில் கரப்பான் பூச்சி ஜனதா கட்சியினர் போராட்டம் நடத்தினர்.

30 நாட்களுக்கும் மேலாக நடைபெற்ற இந்த தொடர் போராட்டத்தில் கரப்பான் பூச்சி ஜனதா கட்சியினருடன் மாணவர்களும் கலந்துகொண்டனர். ஆனால், அமைதியான போராட்டம் நடத்திய மாணவர்கள்



மீது டெல்லி காவல்துறை கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

அதன் எதிரொலியாக, டெல்லியில் நடைபெற்ற மாணவர்கள் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் போராட்டங்கள் வெடித்தது. அதன் ஒரு பகுதியாக தமிழகத்திலும் போராட்டங்கள் தீவிரமடைந்தன.

குறிப்பாக, சென்னை எழும்பூரில் உள்ள ராஜரத்தினம் அரங்கம், தி.நகர் பாலன் இல்லம் உள்ளிட்ட இடங்களிலும் மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாணவர்களின் போராட்ட நெருக்கடியை அடுத்து, மத்திய கல்வித்துறை அமைச்சராக இருந்த தர்மேந்திர பிரதான், நீட் தேர்வு வினாத்தாள் கசிவு மற்றும் தேர்வு முறைகேடு தொடர்பான புகார்களுக்கு பொறுப்பேற்று தனது பதவியை ராஜினாமா செய்தார். மாணவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, டெல்லியில் நடைபெற்ற மாணவர்கள் போராட்டம் வாபஸ் பெறப்பட்டது.

இந்த சூழலில், நீட் எதிர்ப்பு போராட்டத்தின் போது தமிழகத்தில் மாணவர்கள் மீது பதிவு செய்யப்பட்டிருந்த வழக்குகளை தமிழக அரசு ரத்து செய்ய வேண்டும் என்று மாணவர் சங்கங்கள் சார்பில் தொடர்ந்து கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது. இந்நிலையில், மாணவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட அனைத்து வழக்குகளும் ரத்து செய்யப்படுவதாக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது எக்ஸ் பக்கத்தில், "தமிழ்நாடு முதலமைச்சரின் உத்தரவின்படி, நீட் தேர்வை எதிர்த்து போராடிய மாணவர்கள் மீது பதிவுசெய்யப்பட்ட அனைத்து வழக்குகளும் ரத்து செய்யப்படுகின்றன. இதர விவரங்கள் விரைவில் வெளியிடப்படும். தமிழ்நாடு முதலமைச்சருக்கு மனமார்ந்த நன்றி" என்று பதிவிட்டுள்ளார்.

## "கர்நாடக முதல்வருடன் திமுகவுக்கு ரகசிய உடன்பாடு" அமைச்சர் நிர்மல் குமார்

சென்னை, ஆக.3- "காங்கிரஸ் தலைமை சொல்வதை கேட்பதை விட, திமுக குடும்பம் சொல்வதையே கர்நாடக முதல்வர் டி.கே. சிவகுமார் கேட்கிறார். கர்நாடக முதல்வர் டி.கே. சிவகுமாருடன் திமுகவுக்கு ரகசிய உடன்பாடு உள்ளது" என தமிழக சட்டத்துறை அமைச்சர் நிர்மல் குமார் குற்றம் சாட்டினார்.



சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய நிர்மல் குமார், "திமுகவுக்கும், கர்நாடக முதல்வர் டி.கே. சிவகுமாருக்கும் இடையே நல்ல உறவு உள்ளது. அவர்கள் இருவரும் கலந்தாலோசித்துதான் இவையெல்லாம் செய்கிறார்களா என்று சந்தேகம் எழுகிறது. டி.கே. சிவகுமார் திமுக ஆட்சிக்கு வரவேண்டும் என விரும்பினார். காங்கிரஸ் தலைமை சொல்வதை கேட்பதை விட, திமுக குடும்பம் சொல்வதையே சிவகுமார் கேட்கிறார் என பல தரப்பினரும் சொல்லி வருகின்றனர்.

ஏனெனில், திமுக என்ன நினைக்கிறதோ, அதையே தான் டி.கே. சிவகுமாரும் பேசி அதற்கான நடவடிக்கைகளை எடுக்கிறார். அவர்களுக்குள் நல்ல உறவு உள்ளது.

இவர்கள் இருவரும் இதுபோலவே, தண்ணீர் திறந்துவிட்டால் ஜெயலலிதாவுக்கு நல்ல பெயர் கிடைத்து விடும் என கருணாநிதி காலத்தில் முட்டுக்கட்டை போட்டனர். அதையே தான் திமுக இப்போதும் செய்கிறது. அதன்படியே முதல்வர் விஜய் தனிமைப்பட்டு நிற்கிறார் என ஸ்டாலின் சொல்கிறார். தமிழக மக்களுக்கு பின்னடைவை ஏற்படுத்த வேண்டும் என்றுதான் ஸ்டாலின் இது போல சொல்கிறார்.

இதன் மூலமாக டி.கே.சிவகுமாருக்கும், திமுகவுக்கும் உள்ள உறவு வெட்ட வெளிச்சமாகிறது. இதுபோன்ற தரம் தாழ்ந்த நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும்.

தமிழக மக்கள் உரிமையைக் காக்க நாளை உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு வழக்குப் பதிவு செய்ய உள்ளது. கடந்த 30 ஆண்டுகளாக எல்லா வகையிலும் காவிரி விவகாரத்தில் பின்னடைவை ஏற்படுத்தியது திமுகவும், கருணாநிதியும் தான்.

முதல்வரை நெருக்கடிக்குள்ளாக்கவும், அவருக்குச் சிக்கலை ஏற்படுத்தவும் திமுக நினைக்கிறது; ஆனால் அதே வேளையில், காவிரி விவகாரத்தில் இது தமிழக மக்களுக்குப் பின்னடைவாக அமையும் என்பதை திமுக உணரவில்லை" என்றார்.

## காவிரிப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண ஆக.7ல் சென்னையில் மக்கள் திரள் ஆர்ப்பாட்டம்

சென்னை, ஆக.3- காவிரிப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண, மத்திய, மாநில அரசுகளுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில், ஆக.7ம் தேதி சென்னையில் முதல்கட்டமாக மக்கள் திரள் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என பல்வேறு கட்சிகள் பங்கேற்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.




கர்நாடக மேகேதாட்டு அணை கட்டும் முயற்சியை தடுத்து நிறுத்தவும், ஆண்டுதோறும் காவிரிநீர் பங்கீட்டை தடையின்றி பெறவும், புதிய தமிழகம் கட்சி தலைவர் கிருஷ்ணசாமி தலைமையில் பல்வேறு கட்சிகள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் சென்னையில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில், அதிமுக அமைப்புச் செயலாளர் ஓ.எஸ் மணியன், நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், தவாக தலைவர் தி.வேல் முருகன், ஐஜேகே தலைவர் ரவி பச்சமுத்து, பாமக தேர்தல் பிரிவு செயலாளர் ஜெயராமன், அமமுக பொருளாளர் கரிகாலன், கொள்கை பரப்புச் செயலாளர் சி.ஆர். சரஸ்வதி, பாஜக சார்பில் கே.எஸ்.ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு தன்னுரிமை கழக தலைவர் பழ.கருப்பையா உள்பட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றுப் பேசினர்.

அதைத் தொடர்ந்து கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு: காவிரி நதிநீர் மேலாண்மை வாரியம் மற்றும் உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு மாறாக, தமிழகத்தின் உரிமையைப் பாதிக்கும் வகையில் காவிரி ஆற்றின் குறுக்கே மேகேதாட்டு அணை கட்டும் கர்நாடக அரசின் பிடிவாதப் போக்குக்கு தமிழக அரசியல் கட்சிகளின் அவசர ஆலோசனைக் கூட்டம் கடும் கண்டனத்தை தெரிவிக்கிறது.

மே, ஜூன் ஜூலை மாதங்களில் தமிழகத்துக்குத் திறந்துவிட வேண்டிய 40 டிஎம்சி காவிரி நீரை கர்நாடக அரசு திறந்துவிட மறுத்துள்ளது. உடனடியாக உச்ச நீதிமன்றத்தை நாடுவதற்கு பதிலாக, கர்நாடக முதல்வருடன் பேச்சுவார்த்தை, பிரதமருக்கு கடிதம் என இன்றைய தமிழக அரசு நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கிறது.


இந்த இக்கட்டான தருணத்தில், தமிழகத்தில் அனைத்துக் கட்சி கூட்டத்தை கூட்டுமாறு பலமுறை வேண்டுகோள் விடுத்தும், அதை உதாசீனப்படுத்திவிட்டு செயல்படும் தமிழக முதல்வர் விஜய் தலைமையிலான தவெக அரசை அனைத்துக் கட்சி கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

மேலும், காவிரி பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண, தமிழகத்தின் அனைத்து அரசியல் கட்சிகளும் ஓரணியில் திரண்டு மத்திய, மாநில அரசுகளுக்கு உரிய அழுத்தம் கொடுக்கும் வகையில், ஆக.7ம் தேதி சென்னையில் முதல்கட்டமாக மக்கள் திரள் ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதைத்தொடர்ந்து செய்தியாளர்களிடம் புதிய தமிழகம் கட்சி தலைவர் கிருஷ்ணசாமி கூறும்போது, ''7ம் தேதி நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் அனைத்து கட்சிகளும் கலந்துகொள்ள வேண்டும்'' என்றார்.

## கனமழையால் சபரிமலையில் பெருவெள்ளம்: பம்பை ஆற்று பாலத்தில் கயிறு கட்டி தடுப்பு அமைப்பு

சென்னை, ஆக.3- கேரளத்தில் பெய்துவரும் கனமழையால் சபரிமலையில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. பாதுகாப்பு காரணங்களுக்காக, பம்பை ஆற்றுப் பாலத்தின் குறுக்கே கயிறு கட்டி தடுப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே, சபரி மலைக்கு பக்தர்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.



கேரளத்தில் தென்மேற்குப் பருவமழை ஜூன் 4ல் தொடங்கி, 2 நாட்களிலேயே வலுவிழந்தது. இதனால், அங்கு மழையின்றி வெயிலின் தாக்கம் அதிகரித்து இருந்தது. இந்நிலையில், கடந்த 2 நாட்களாக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் கனமழை பெய்து வருகிறது.

இதனால், மலப்புரம், வயநாடு உள்ளிட்ட 5 மாவட்டங்களுக்கு 'ரெட் அலர்ட்' எச்சரிக்கையும், இடுக்கி, பத்தினம்திட்டா, எர்ணாகுளம், பாலக்காடு உள்ளிட்ட 6 மாவட்டங்களுக்கு ஆரஞ்சு எச்சரிக்கையும் அறிவிக்கப்பட்டுள்ளது. பத்தினம்திட்டாவில் பெய்து வரும் கனமழையால் சபரிமலை பம்பை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. மேலும், இதன் முகத்துவாரமான புலாச்சிமலையில் மழை தொடர்ந்து பெய்வதால், நீரின் அளவு அதிகரித்து கொண்டே செல்கிறது.

சபரிமலையின் அடிவாரப் பகுதியில் இரண்டு கரைகளையும் தொட்டபடி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. எனவே, பாதுகாப்பு காரணங்களுக்காக பம்பை ஆற்றுப் பாலத்தின் நுழைவுப் பகுதிகளில் கயிறு கட்டி தடுப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. சபரிமலை ஐயப்பன் கோயிலை பொறுத்தவரை, நிறைபுத்தரிசி வழிபாட்டுக்காக நாளை (ஞாயிறு) மாலை கோயில் நடை திறக்கப்பட உள்ளது. இதற்காக, ஏராளமான ஐயப்ப பக்தர்கள் முன்பதிவு செய்துள்ளனர்.

இதற்காக பக்தர்கள் ஞாயிறு, திங்களில் பம்பையை கடந்து சபரிமலை செல்ல இருந்த நிலையில், கனமழையால் அபாயகரமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, பக்தர்கள் வழிபாட்டுக்குச் செல்வதில் சிக்கல் ஏற்பட்டு உள்ளது.

## மக்கள்தொகை கணக்கெடுப்பு தொடங்கியது: முழுமையான தகவல்களை வழங்க இயக்குநர் வலியுறுத்தல்

சென்னை, ஆக.3- மக்கள்தொகை கணக்கெடுப்பின் வீடுகள் பட்டியல், வீட்டின் வசதிகள் கணக்கெடுப்பு களப்பணி தொடங்கியது.



இந்தியாவில் மக்கள் தொகை கணக்கெடுப்பு 16 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது நடைபெற்று வருகிறது. வீடுகள் பட்டியல், வீட்டின் வசதி கணக்கெடுப்பு, மக்கள் தொகை கணக்கெடுப்பு என்று இந்த பணி 2 கட்டங்களாக நடைபெறும் என தெரிவிக்கப்பட்டது. மக்கள் நேரடியாக தங்கள் சுய விவரங்களை பதிவேற்றம் செய்யும் வகையில் சுய கணக்கெடுப்பு பணி கடந்த 17ம் தேதி தொடங்கி 31ம் தேதியுடன் நிறைவு பெற்றது.

இதன் மூலம் தமிழகத்தில் 10 லட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பத்தினர் இணைய தளம் வழியாக தங்கள் விவரங்களை சமர்ப்பித்தனர். இந்நிலையில், வீடுகள் பட்டியல் மற்றும் வீட்டின் வசதிகள் கணக்கெடுப்பின் களப்பணிகள் நேற்று தொடங்கின. தமிழகம் முழுவதும் இப்பணி இம்மாதம் 30ம் தேதி வரை நடைபெற உள்ளது. 1.15 லட்சம் பேர் கணக்கெடுப்பு பணிகளில் ஈடுபட உள்ளனர்.

அவர்கள் வீடு வீடாக வந்து கணக்கெடுப்பை நடத்துவார்கள். 33 கேள்விகள் கொண்ட ஒரு கட்டமைக்கப்பட்ட கேள்வித்தாளை கொண்டு, இப்பணி மேற்கொள்ளப்படும். வீடுகளின் நிலை, குடிநீர் வசதி, சுகாதாரம், மின்சாரம், இணைய வசதி, சமையல் எரிபொருள் வசதி, கழிவறை வசதி, வாகனங்கள் போன்ற முக்கிய தரவுகள் சேகரிக்கப்படும்.

இதுகுறித்து மக்கள் தொகை கணக்கெடுப்பு தமிழக இயக்குநர் சுந்தரேஷ் பாபு கூறியதாவது: முதல்முறையாக முழுவதும் நவீன டிஜிட்டல் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. பிரத்யேக மொபைல் செயலியை கணக்கெடுப்பாளர்கள் பயன்படுத்துவார்கள். தரவுத்தளத்தில் தகவல்கள் பத்திரமாக, ரகசியமாக சேமிக்கப்படும். 1.15 லட்சம் கணக்கெடுப்பாளர்களை கண்காணிக்க 19 ஆயிரம் மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மக்கள்தொகை கணக்கெடுப்பு சட்டத்தின்படி, உண்மையான, முழுமையான தகவல்களை மக்கள் வழங்க வேண்டும். இப்பணிக்கு மக்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு செய்திக்குறிப்பு

நீலகிரி, ஆக.3-

நீலகிரி மாவட்டத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் கீழ், 2026 27 ஆம் ஆண்டிற்கான அட்மா திட்டத்தின் மூலம், நவீன மற்றும் நிலையான தோட்டக்கலை தொழில்நுட்பங்களை விவசாயிகள் பின்பற்றும் வகையில், வட்டார மற்றும் கிராம அளவில் பல்வேறு விவசாயிகள் நலன் சார்ந்த பயிற்சிகள், செயல்விளக்கங்கள் மற்றும் கண்டுணர்வு சுற்றுலாக்கள் நடத்தப்பட உள்ளன. உள்மாவட்ட, உள்மாநில மற்றும் வெளிமாநில அளவுகளில் நடத்தப்பட உள்ள பயிற்சிகளில், பழப்பயிர்கள் மற்றும் மலர்ப் பயிர்களின் உற்பத்தித் திறன் மேம்பாட்டு தொழில்நுட்பங்கள், காளான் உற்பத்தி தொழில்நுட்பம், தேனீ வளர்ப்பு, இயற்கை வேளாண்மை, மண்புழு உரம் தயாரித்தல், மண் வள மேலாண்மை, உயிரியல் முறையில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை மற்றும் மதிப்புக்கூட்டல், டிஜிட்டல் வேளாண்மை, தோட்டக்கலையில் செயற்கை நுண்ணறிவு பயன்பாடு உள்ளிட்ட தலைப்புகளில் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன.

மேலும், காட்டுப்பன்றி விரட்டும் கருவிகள், தெளிப்பான்கள், காளான் உற்பத்தி, தேனீ வளர்ப்பு, இயற்கை இடுபொருட்கள் தயாரித்தல், ஒளி பொறி மற்றும் மஞ்சள் ஒட்டும் பொறி ஆகியவற்றின் செயல்விளக்கங்கள் நடத்தப்பட உள்ளன. அத்துடன், மாவட்டத்திற்குள் மற்றும் மாநிலத்திற்குள் கண்டுணர்வு சுற்றுலாக்கள் ஏற்பாடு செய்யப்பட்டு, உயர் மதிப்புடைய பயிர்கள் சாகுபடி, பாதுகாக்கப்பட்ட பயிர்சாகுபடி, உயர் தொழில்நுட்ப நாற்றங்கால் மையங்கள் மற்றும் பழம் மற்றும் காய்கறிப் பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை போன்ற நவீன தொழில்நுட்பங்களை விவசாயிகள் நேரடியாக அறிந்து, அவற்றை பின்பற்றி உற்பத்தித் திறனையும் விவசாய வருமானத்தையும் உயர்த்திக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட உள்ளது.எனவே, 2026 27 ஆம் ஆண்டில் அட்மா திட்டத்தின் கீழ் நடத்தப்பட உள்ள பல்வேறுவீ பயிற்சிகள், செயல்விளக்கங்கள் மற்றும் கண்டுணர்வு சுற்றுலாக்களில் பங்கேற்று பயனடைய விரும்பும் விவசாயிகள், தங்கள் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தில் முன்பதிவு செய்து, நவீன வேளாண்மை மற்றும் தோட்டக்கலை தொழில்நுட்பங்களை அறிந்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.



■ நீலகிரி மாவட்டம், குன்னூர் பிராவிடென்ஸ் மகளிர் கல்லூரியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டு மையம், தமிழ்நாடு மாநில ஊரக நகர்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் நடைபெற்ற மாபெரும் தனியார் வேலை வாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.வாசுகி பணி நியமன ஆணைகளை வழங்கினார். உடன் மண்டல இணை இயக்குநர் (வேலை வாய்ப்புத்துறை) ஜோதி மணி உதவி இயக்குநர் (வேலை வாய்ப்பு) சுப்ரமணி, மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் ராஜேஷ், பொது மேலாளர் மாவட்ட தொழில் மையம் பிரேம்குமார் உட்பட பலர் உடனிருந்தனர்




# மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 2027ஐ முன்னிட்டு முதற்கட்ட வீட்டுப்பட்டியல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்புப் பணி

தேனி, ஆக.3-

தேனி மாவட்டம், தேனி அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட பொம்மையகவுண்டன்பட்டியில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 2027ஐ முன்னிட்டு முதற்கட்ட வீட்டுப்பட்டியல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்புப் பணிகளை முதன்மை மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தொடங்கி வைத்தார்.மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 2027 இந்தியாவின் முதல் முழுமையான டிஜிட்டல் கணக்கெடுப்பாகும்இம்மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இரண்டு கட்டங்களாக நடைபெற உள்ளது. முதல் கட்டம் வீட்டுப்பட்டியல் மற்றும் வீட்டுகள் கணக்கெடுப்பு. இரண்டாம் கட்டம் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு.முதல் கட்டக் கணக்கெடுப்பு இன்று ஆகஸ்ட் 1 முதல் ஆகஸ்ட் 30ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. இதற்கு முன்னதாக 15 நாட்கள் சுய கணக்கெடுப்பு (Self Enumeration) விவரங்களை ஜுலை 17 முதல் ஜுலை 31 வரை பொதுமக்கள் தாங்களாகவே பதிவேற்றம் செய்ய அறிவுறுத்தப்பட்டதுமுதல் கட்டக் கணக்கெடுப்பிற்காக, தேனி மாவட்டத்தில் கணக்கெடுப்பாளர்கள் அனைவரின் வீட்டிற்கும் வருகை தர உள்ளார்கள். இந்த முதல் கட்டத்தில் 33 கேள்விகள் கேட்கப்படும். தேனி மாவட்டம் முழுவதும் 2311 கணக்கெடுப்பாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் இப்பணியில் ஈடுபட உள்ளார்கள். தேனி மாவட்டத்தில் சுய கணக்கெடுப்பு விவரங்களைப் பதிவு செய்தவர்களுக்கு 11 இலக்கம் கொண்ட எண் (Eleven digit code) தங்கள் தொலைப்பேசி எண்ணிற்கு வரப்பெற்றிருக்கும். அதனை, தங்கள் வீடுகளுக்கு கணக்கெடுப்பாளர்கள் வரும்போது அவர்களிடம் குறிப்பிடும்போது, நீங்கள் பதிவேற்றம் செய்த விவரங்கள் சரியாக உள்ளதாக என சரிபார்த்து இறுதி (approve) செய்வார்கள். எனவே மக்கள்தொகைக் கணக்கெடுப்பு 2027 பணிகளை 100% நிறைவு செய்வதற்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு தர வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர்.ப.ராஜகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது). இராமகிருஷ்ணன், பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் (பொ). கவிதா, வட்டாட்சியர்கள் ரத்தினம் (தேனி அல்லிநகரம்).மருதுபாண்டி (தேர்தல்), தேனி அல்லிநகரம் நகராட்சி ஆணையாளர் செல்வி பார்கவி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# குரோம்பேட்டையில் பரிசுத்த வேதாகமத்தை மூன்று விதங்களில் மூன்று உலக சாதனை படைத்த போதகருக்கு யுனிவர்சல் அச்சீவ்மென்ட் புக் ஆப் ரெக்கார்ட் மற்றும் ஃபியூச்சர் கலாம் புக் ஆப் ரெக்கார்ட் ஆகிய நிறுவனம் பதக்கம் மற்றும் சான்றிதழ்







குரோம்பேட்டை, ஆக.3-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட குரோம்பேட்டை நியூ காலனி 13வது தெருவில் அமைந்துள்ள புது வாழ்வு ஜெம்ஸ் பேராலயத்தின் தலைமை போதகர் எச்.ஐசக் டேனியல் என்பவர் பல்வேறு விதங்களில் பரிசுத்த வேதாகமத்தையும் வடிவமைத்து பல உலக சாதனை புத்தகங்களில் இடம் பெற்றுள்ளார்.அதேபோல் தற்பொழுது மீண்டும் 13ஜ்19 அங்குலம் மற்றும் 9ஜ் 13 அங்குலம் அளவில் தங்க தகடுகளில் அச்சிடப்பட்ட 1462 பக்கங்களைக் கொண்ட தங்க தாள்களில் (GOLDEN SHEET) பரிசுத்த வேதாகமமும், அலுமினிய தகடுகள் மூலம் 6வூ9 அங்குலம் அளவில் 1462 பக்கங்களை கொண்ட பரிசுத்த வேதாகமமும், உலகின் முதல் முதலில் ஐந்து பக்கங்களில் பரிசுத்த வேதாகமம் ஐந்து பக்கங்களில் மட்டுமே அச்சிடப்பட்டது வண்ணம் 5 அடிப்படையில் பைபிள் உண்மைகளில் ஒன்றை அடையாள பூர்வமாக குறிக்கிறது பச்சை நிறம் செழிப்பையும், கருப்பு நிறம் பாவத்தையும், சிவப்பு நிறம் இயேசு கிறிஸ்துவின் மூலமாக இரட்சிப்பையும், வெள்ளை நிறம் பரிசுத்தத்தையும் மற்றும் மஞ்சள் அல்லது தங்கம் நிறம் பரலோகத்தையும் குறிக்கிறது அந்த வகையில் ஐந்து வண்ணங்களில் பரிசுத்த வேதாகமத்தை உருவாக்கி சாதனை படைத்துள்ளார். இந்த மூன்று உலக சாதனை படைத்தை போதகர் ஐசக் டேனியலை அவர்களை அங்கீகரிக்கும் விதமாக யுனிவர்சல் அச்சீவ்மென்ட் புக் ஆஃப் மற்றும் ஃபியூச்சர் கலாம் புக் ஆப் ரெக்கார்ட் ஆகிய சாதனை புத்தகத்தில் இடம் பெற்று அதற்கான பதக்கங்களையும் வெற்றி சான்றிதழ்களையும் போதகர் ஐசக் டேனியல் அவர்களுக்கு அந்நிறுவனத்தின் தலைமை நிர்வாகிகள் மூலம் வழங்கி கௌரவிக்கப்பட்டதுபேட்டி: பின்னர் செய்தியாளர்களை சந்தித்த போதகர் ஐசக் டேனியல் அவர்கள் கூறுகையில் இன்று புதிய மூன்று சாதனைகளைப் படைத்துள்ளேன் அதேபோல் இதற்கு முன்னர் அதிக நீளம் கொண்ட பரிசுத்த வேதாகமம்,அதிக எடை கொண்ட பரிசுத்த வேதாகமம்,குறைந்த எடையில் சிறிய வகையில் பரிசுத்த வேதாகமம் ஆகியவற்றை உருவாக்கி சாதனை படைத்துள்ளேன் இதே போல் பல்வேறு சாதனைகளை படைத்து சாதனை புத்தகத்தில் இடம் பெற்றுள்ளேன். இன்று படைத்த மூன்று சாதனைகளும் என்னுடைய ஆவி கூறிய தகப்பனார் மறைந்த பேராயர் தயானந்தன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அவர்களுக்கு சமர்ப்பிக்கிறேன் என்று கூறினார்...

# ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் ஆடிதிருவிழா பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கல்

மாதவரம், ஆக.3-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி மொண்டியம்மன் நகர் முத்துமாரியம்மன் கோயில் தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் 11ம் ஆண்டு ஆடிமாத திருவிழாவை முன்னிட்டு வேல்பால் நிலையம் உரிமையாளரும் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட இளைஞரணி துணை செயலாளருமான சாமிவடிவேல் கலையரசி குடும்பத்தினர் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் செய்து பின்னர் வண்ணமலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு மஹா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து சிறப்பு அழைப்பாளர்களாக அதிமுக மாவட்ட செயலாளர் மாதவரம் வி.மூர்த்தி,



முன்னாள் பொன்னேரி சட்ட மன்ற உறுப்பினர் சிறுனியம் பி.பலராமன் ஆகியோர் கலந்துகொண்டு ஆலய அனைத்துநிலை நிர்வாகிகள் முன்னிலையில் சுமார் 2000க்கும் மேற்பட்ட சுற்றுவட்டார பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானத்தை துவக்கி வைத்தனர். இதில் அதிமுக நிர்வாகிகள் கார்மேகம், மனோகரன், மாணிக்கம், பாலா, ஆனந்த், இளங்கோவன், அரி, ஜெகன், வேலாயுதம், காசி, பாலகணேசன், கண்ணன், சுரேஷ், ராஜா, உலகநாதன், பிரகாஷ், பரமசிவம், உள்ளிட்ட அதிமுக மகளிரணி நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.



# கொடைக்கானலில் கிணற்றில் தவறி விழுந்த ஒற்றை காட்டெருமை

கொடைக்கானல், ஆக.3-

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் பகுதிகளில் கடந்த சில மாதங்களாகவே வன விலங்குகள் குடியிருப்பு பகுதிகளில் உலா வருவதும், விவசாய நிலைகளை சேதப்படுத்துவதும், வீட்டு கால்நடைகளை தாக்குவதும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.குறிப்பாக பொது மக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் உட்பட பலரையும் தாக்கி உயிரிழந்த சம்பவங்களும் அடிக்கடி நடைபெற்று வருகிறது,இந்த நிலையில் நேற்று அட்டுவம்பட்டி பகுதியில் உள்ள தனியார் தோட்டத்தில் கிணற்றில் தவறி விழுந்த ஒற்றை காட்டெருமையை சுமார் இரண்டு மணி நேரம் வனத்துறையினர் கயிறு கட்டி போராடி மீட்டனர், அப்போது கிணற்றில் இருந்து ஆக்ரோசமாக வெளியே வந்த காட்டெருமை மீட்பு பணியில் ஈடுபட்டிருந்த ஜெயச்சந்திரன் என்ற ஃபாரஸ்ட் நோக்கி ஆக்ரோசமாக முட்ட சென்றது, நல்வாய்பாக நூலிழையில் அவர் நகர்ந்து சென்றதால் அவர் தப்பித்தார், இந்த வீடியோவானது தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகிக் வருகிறது,தொடர்ந்து கொடைக்கானல் மலை பகுதிகளில் வன விலங்குகள் நடமாட்டம் அதிகரித்து வரும் நிலையில் வனத்துறையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ளது.



# என்.எம்.துரைசாமி 6ம் ஆண்டு நினைவு நாள் முதியோர்களுக்கு மதியஉணவு வழங்கல்

மாதவரம், ஆக.3-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி செங்குன்றம் நாரவாரிகுப்பம் பேரூராட்சி முன்னாள் தலைவரும் செங்குன்றம் நெல் அரிசி வணிகர்கள் மற்றும் அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவரும் மற்றும் திருவள்ளூர் ஒருங்கிணைந்த மாவட்ட முன்னாள் அவைத்தலை வருமான என்.எம்.துரைசாமியின் 6ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு புள்ளிலையன் ஊராட்சியில் உள்ள ஜீவஜோதி ஆதரவற்ற முதியோர் இல்லத்தில் உள்ள முதியோர்களுக்கு மதியஉணவு வழங்கும் நிகழ்ச்சி மருத்துவர் என். எம்.டி. கோபால், பேரூராட்சி கவுன்சிலர் என்.எம்.டி.இளங்கோவன் ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்றது.நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக முன்னாள் மாதவரம் சட்டமன்ற திமுக எம்.எல்.ஏ., எஸ்.சுதர்சனம் கலந்து கொண்டு என்.எம்.துரை சாமி உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி பின்னர் முதியோர்களுக்கு மதிய உணவினை வழங்கினார்.இதில் திமுக நிர்வாகிகள் உள்ளிட்ட குடும்பத் தினர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# நடை ரோந்து (Foot Patrolling) மூலம் குற்றங்கள் நடைபெறா வண்ணம் கண்காணிக்கும்

தேனி, ஆக.3-

தேனி மாவட்ட காவல்துறையினர்.பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கிலும் தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ரி.ஷி.பிரவீன் கௌதம், உத்தரவின் பேரில், தேனி மாவட்ட காவல்துறையினர் தீவிர நடை ரோந்து (Foot Patrolling) பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மக்கள் அதிகம் கூடும் இடங்கள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள், குடியிருப்பு பகுதிகள் மற்றும் முக்கிய சாலைகளில் காவல்துறையினர் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடை ரோந்து பணியின் மூலம் திருட்டு, வழிப்பறி, சமூக விரோத செயல்கள் உள்ளிட்ட குற்றங்களை முன்கூட்டியே தடுத்து, சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில்வீடு வீடாக மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகலெக்டர் துவக்கி வைத்தார்



கிருஷ்ணகிரி, ஆக.3-

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வீடு, வீடாக மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியினை கலெக்டர் துவக்கி வைத்தார்.மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027ன் ஒரு பகுதியாக வீடு வீடாக கணக்கெடுக்கும் பணி மாநிலம் முழுவதும் நேற்று துவங்கியது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கிருஷ்ணகிரி நகராட்சிக்குட்பட்ட ஜக்கப்பன் நகர் 18வது வார்டு, முதல் குறுக்கு தெரு பகுதியில் மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 ஐ நேற்று வீடு, வீடாக சென்று கணக்கெடுப்பு பணியை மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார் துவக்கி வைத்து, பார்வையிட்டார்.அப்போது அவர் கூறியதாவது: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027ன் ஒரு பகுதியாக வீடுவீடாக கணக்கெடுக்கும் பணி இன்று (நேற்று) துவங்கப்பட்டுள்ளது. இப்பணி இன்று (நேற்று) முதல் வருகிற 30ம் தேதி வரை மாவட்டம் முழுவதும் நடைபெற உள்ளது. இப்பணிக்காக மாவட்டம் முழுவதும் 2,660 மக்கள்கணக்கெடுப்பாளர்கள் மற்றும்418 மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் நேரில் சென்று கணக்கெடுப்பு பணிகளை மேற்கொள்வார்கள். கணக்கெடுப்பு பணியில் ஈடுபடும் அனைத்து கணக்கெடுப்பாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு அரசு வழங்கிய அடையாள அட்டையுடன் வருகை தருவார்கள். பெபதுமக்கள் அவர்களின் அடையாள அட்டையை உறுதிப்படுத்திக் கொண்டு, தேவையான விவரங்களை வழங்கி முழு ஒத்துழைப்பு அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். கணக்கெடுப்பின் போது பெறப்படும் தகவல்கள் அனைத்தும் ரகசியமாக பாதுகாக்கப்பட்டு, கணக்கெடுப்பு தொடர்பான அதிகாரப்பூர்வ புள்ளி விவர நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படும். எனவே, கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த அனைத்து பொதுமக்களும் கணக்கெடுப் பாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி, மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணியை வெற்றிகரமாக நடத்த உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றார்.இந்த ஆய்வின் போது, கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் ஷாஜகான், மாவட்ட புள்ளியில் துறை துணை இயக்குநர் குப்புசாமி, நகராட்சி ஆணையாளர் சேகர், தனி தாசில்தார் வெங்கடேசன், கிருஷ்ணகிரி தாசில்தார் ராஜலட்சுமி, நகரமைப்பு அலுவலர் மலர்விழி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.




■ தேனி மாவட்டம் குச்சனூர் அருள்மிகு சுயம்பு சனீஸ்வர பகவான் திருக்கோயில் ஆடித்திருவிழா நடைபெற்றுவருவதைத்தொடர்ந்து, பக்தர்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்கும் வகையில் தற்காலிக புறக்காவல் நிலையம் அமைக்கப்பட்டு காவல்துறையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுவருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன்.நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



# காரங்காடு தூய செங்கோல் மாதா திருத்தலத் திருவிழா!

திருவாடானை, ஆக.3-

இராமநாதபுரம் மாவட்டம், தொண்டி அருகே உள்ள காரங்காடு கிராமத்தில் சிறப்பு வாய்ந்த தூய செங்கோல் மாதா திருத்தலம் உள்ளது. இத்திருத்தலத் திருவிழா கடந்த ஜூலை மாதம் 24 ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. இத்திருவிழாவானது சனிக்கிழமை இராஜசிங்கமங்கலம் மறைவட்ட அதிபர் அருட்தந்தை தேவசகாயம் தலைமையில் பங்குத்தந்தை ரெமிஜியஸ் சம்பை கிராம பங்கு தந்தையர்கள் செல்வராஜ் ,பாக்கியராஜ் அருள்தந்தை இரெட்சனியதாஸ், அருள் தந்தை அமலதாஸ், அருள் தந்தை பாலா தொண்டி பங்குத்தந்தை வியாகுல அமிர்தராஜ், முத்துப்பட்டினம் பங்குத்தந்தை அமல்ராஜ், குருமிலாங்குடி பங்குத்தந்தை ஜேம்ஸ் ராஜா ஆகியோர் திருவிழா சிறப்பு திருப்பலியை நடத்தினர்.அதன் பிறகு நற்கருணை பவனியும் நற்கருணை ஆராதனையும் நடைபெற்றது. கப்புச்சின் சபை துணை மாநில தலைவரும் திண்டுக்கல் அனுகிரஹா கலை முதல்வருமான அருள் தந்தை பெர்னாட்சா வழி நடத்தினார்.அதனை தொடர்ந்து தூய செங்கோல் மாதா சுரூபம் தாங்கிய தேர்பவனி நடைபெற்றது. புனித செபஸ்தியார் புனித சவேரியாரினுடைய தேர் பவனியும் கிராமத்தின் முக்கிய வீதிகள் வழியாக பவனியாக நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவ மக்கள் அருள் சகோதரிகள், அருட் சகோதரர்கள் கலந்து கொண்டனர். ஞாயிற்றுக்கிழமை காலை பெருவிழா சிறப்பு திருப்பலி சிவகங்கை வியான்னி அருள்பணி மைய இயக்குனர் அருள்பணி செபஸ்தியான் தலைமையில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து தேர்ப்பவனியும் அதனைத் தொடர்ந்து கொடி இறக்கமும் நடைபெற்றது. திருவிழாவிற்கான ஏற்பாடுகளை அருட்சகோதரிகள் செல்வம், ஞான சுகந்தா, ஜாக்குலின் ஆலய பணியாளர் ஆண்டனி ரோமியோ கிராம நிர்வாகிகள் சேசு, ஜோசப் மற்றும் நிர்வாகத்தினர், கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்.



# கிருஷ்ணகிரி நகராட்சியில் 1டன் பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் கடைஉரிமையாளர்களுக்கு ரூ.65 ஆயிரம் அபராதம்

கிருஷ்ணகிரி, ஆக.3-

கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையாளர் சேகர் உத்தரவின் பேரில் 22 வது வார்டு பகுதியில் பிளாஸ்டிக் பயன்பாட்டிற்கு எதிரான சிறப்பு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சுகாதார அலுவலர் பாண்டியராஜன் தலைமையில் சுகாதார ஆய்வாளர்கள் வடிவேல், சோமேஷ், ராமசந்திரன் மற்றும் மாதேஸ்வரன் ஆகியோர் இந்த ஆய்வில் ஈடுபட்டனர்.குறிப்பாக தடை செய்யப்பட்ட ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாடு மற்றும் இருப்பு குறித்து கடைகளில் ஆய்வு நடத்தப்பட்டது. 20க்கும் மேற்பட்ட கடைகளில் நடத்தப்பட்ட ஆய்வின்போது, பிளாஸ்டிக் பைகள், கப்புகள் மற்றும் ஸ்ட்ராக்கள் உள்ளிட்ட அரசால் தடை செய்யப்பட்ட சுமார் 1 டன் எடையுள்ள பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. சம்பந்தப்பட்ட கடைக்காரர்களிடம் இருந்து ரூ.65 ஆயிரம் அபராதம் வசூலிக்கப்பட்டது.மேலும், தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தவோ அல்லது விற்பனை செய்யவோ கூடாது என கடை உரிமையாளருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன், தமிழ்நாடு அரசின் பிளாஸ்டிக் தடை விதிகளை தவறாமல் பின்பற்றுமாறும் அறிவுறுத்தப்பட்டது. மேலும் பிளாஸ்டிக்கால் உடல்நலம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் தீமைகள் குறித்து வணிகர்கள் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. அனைத்து வார்டுகளிலும் இத்தகைய ஆய்வுகள் தொடர்ந்து நடத்தப்படும் என்றும், பிளாஸ்டிக் தடை விதிகளை மீறுவோர் மீது அபராதத்துடன் கூடிய கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கிருஷ்ணகிரி நகராட்சி நிர்வாகம் தெரிவித்து உள்ளது. இந்த ஆய்வின்போது சுகாதார மேற்பார்வையாளர்கள், தூய்மை இந்தியா திட்ட மேற்பார்வையாளர்கள் மற்றும் நகராட்சி பணியாளர்கள் உடன் இருந்தனர்.



■ தேனி மாவட்டம் க.புதுப்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட பைபாஸ் சாலை பிரிவு பகுதியில் உள்ள ஓடைகளில் இரவுநேரங்களில் கட்டிட கழிவுகள், குப்பை மற்றும் இறைச்சி கழிவுகளை கொட்டிச்செல்வதால் துர்நாற்றம் வீசுவதோடு சுகாதாரக்கேடு ஏற்படுவதாக புகார் வரப்பெற்றதைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், உத்தரவின்பேரில், கம்பம்ஏகலூத்து சாலை ஓரத்தில் கொட்டப்பட்டிருந்த கழிவுகள் அகற்றப்பட்டுள்ளது என க.புதுப்பட்டி பேரூராட்சி நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# சிங்கப்பெண் சிறப்பு படை சார்பில் 7 நாளில் 378 புகார் மீது நடவடிக்கை

## 4 பெண்கள், 8 குழந்தைகள் மீட்பு

சென்னை, ஆக.3-

தமிழகம் முழுவதும் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில், தமிழ்நாடு காவல்துறையின் சிங்கப்பெண் சிறப்புப் படை கடந்த ஒரு வாரமாக தீவிர களப்பணிகளை மேற்கொண்டு பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. ஜூலை 24 முதல் 30 வரை நடைபெற்ற நடவடிக்கைகளில், மாவட்ட களப்பிரிவுகள் மொத்தம் 378 புகார்களுக்கு உடனடி நடவடிக்கை மேற்கொண்டதுடன், 23 குற்றவழக்குகள் பதிவு செய்யும் வகையில் செயல்பட்டன. மேலும், காணாமல் போன 4 பெண்கள் மற்றும் 8 குழந்தைகள் கண்டுபிடிக்கப்பட்டு பாதுகாப்பாக அவர்களது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.இந்த காலகட்டத்தில், பள்ளிகள், கல்லூரிகள், பொதுமக்கள் கூடும் இடங்கள் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மத்தியில் 3,711 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. மாநிலம் முழுவதும் குற்றச் சம்பவங்கள் நடைபெற வாய்ப்புள்ள 10,320 இடங்களில் தீவிர கண்காணிப்பு மற்றும் ரோந்து பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.மேலும், அறிவுசார் குறைபாடுடைய 9 பேர் மீட்கப்பட்டு மறுவாழ்வு வழங்கப்பட்டதுடன், 3 குழந்தை திருமணங்கள் தடுக்கப்பட்டன. பள்ளிப் படிப்பை இடைநிறுத்தியிருந்த 62 குழந்தைகள் மீண்டும் கல்வி நிறுவனங்களில் சேர்க்கப்பட்டனர்.சென்னை, தாம்பரம், ஆவடி, தூத்துக்குடி, திருவள்ளூர், திருவண்ணாமலை, தேனி, திருநெல்வேலி, திருப்பூர் மற்றும் திருப்பத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் பதிவான சம்பவங்களில் சிங்கப்பெண் சிறப்புப் படை விரைந்து செயல்பட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டது.பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டதுடன், குழந்தை திருமணங்கள் தடுக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட நபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டனர். பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்கும் நோக்கில் சிங்கப்பெண் சிறப்புப் படையின் இதுபோன்ற துரித மற்றும் தொடர்ச்சியான நடவடிக்கைகள் மாநிலம் முழுவதும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக தமிழ்நாடு காவல்துறை தெரிவித்துள்ளது.



# கிருஷ்ணகிரி மாங்கனி கண்காட்சியில் நுகர்வோர் உரிமை பாதுகாப்பு அமைப்பின் விழிப்புணர்வு கலைநிகழ்ச்சி - பொதுமக்கள் உற்சாக பங்கேற்பு

கிருஷ்ணகிரி, ஆக.3-:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடைபெற்று வரும் 32வது ஆண்டு அகில இந்திய மாங்கனி கண்காட்சியில், அனைத்து நுகர்வோர் உரிமை பாதுகாப்பு அமைப்பின் சார்பில் நேற்று (ஜூலை 31) மாலை 7 மணியளவில் விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன. பல்சுவை கலைஞர்கள் மற்றும் அனைத்து நுகர்வோர் உரிமை பாதுகாப்பு அமைப்பின் தன்னார்வலர்கள் இணைந்து நடத்திய இந்த நிகழ்ச்சியில், மாநிலத் தலைவர் எல். அப்பாதுரை சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். மேலும், அமைப்பின் மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள், ஆயிரக்கணக்கான பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.நிகழ்ச்சியில் குழந்தைகள் மற்றும் பெண்கள் பாதுகாப்பு, நுகர்வோர் உரிமைகள், மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் உள்ளிட்ட பல்வேறு சமூக விழிப்புணர்வு கருத்துகள் மேடை நாடகங்கள் மற்றும் திரைப்பட நடிகர்களின் கலைநிகழ்ச்சிகள் மூலம் பொதுமக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டன. அத்துடன், தமிழக அரசின் சிங்கப்பெண் திட்டம் மூலம் பெண்களின் பாதுகாப்பின் அவசியம், பெண்களுக்கான அவசர உதவி எண்கள் மற்றும் பாதுகாப்பு வழிமுறைகள் குறித்தும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.இந்த நிகழ்ச்சியை பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கண்டு ரசித்ததுடன், விழிப்புணர்வு கருத்துகளை வரவேற்றனர். நிகழ்ச்சியின் நிறைவில், கலைநிகழ்ச்சிகளில் பங்கேற்ற கலைஞர்களுக்கு அனைத்து நுகர்வோர் உரிமை பாதுகாப்பு அமைப்பின் சார்பில் மாநிலத் தலைவர் எல். அப்பாதுரை பாராட்டு மற்றும் நினைவுப் பரிசுகளை வழங்கி கவுரவித்தார்.நிகழ்ச்சியை பாலமுருகன் தொகுத்து வழங்கினார். இறுதியாக, அமைப்பின் நிர்வாகி சேகர், மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட நிர்வாகத்திற்கு நன்றி தெரிவித்து நிகழ்ச்சியை நிறைவு செய்து வைத்தார்.

# நடப்பாண்டில் முதன்முறையாக நிரம்பிய பில்லூர் அணை பவானி ஆற்றின் கரையோர பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை



மேட்டுப்பாளையம், ஆக.3-

கோவை,திருப்பூர் மாவட்ட மக்களின் முக்கிய குடிநீர் ஆதாரமாக இருந்து வரும் பில்லூர் அணையின் மொத்த கொள்ளளவு 100 அடி.தற்போது நீலகிரி மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் கனமழை காரணமாக பில்லூர் அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வந்தது.கடந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை காலங்களில் பில்லூர் அணை நான்கு முறை நிரம்பியது.ஆனால்,இந்த ஆண்டில் முதன்முறையாக பில்லூர் அணை தனது முழு கொள்ளளவான 100 அடியில் 97 அடியை இன்று அதிகாலை 3.30 மணியளவில் அடைந்தது. இதனால் அணையின் பாதுகாப்பு கருதி அணைக்கு வரும் நீரின் அளவான 8 ஆயிரம் கன அடி நீர் அப்படியே நான்கு மதகுகளின் வழியாக வினாடிக்கு 2060 கன அடி நீர் மற்றும் மின் உற்பத்திக்காக 6 ஆயிரம் கன அடி நீர் என மொத்தமாக 8060 கன அடி நீர் பவானி ஆற்றில் திறந்து விடப்பட்டுள்ளது. இதனால் பவானி ஆற்றின் கரையோர பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்து மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது. இதனால் தேக்கம்பட்டி,நெல்லித்துறை, ஓடந்துறை,பாலப்பட்டி, ஊமப்பாளையம், வச்சினம்பாளையம், சிறுமுகை, லிங்காபுரம் உள்ளிட்ட கரையோர பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு வருவாய்த்துறையினர் அறிவுறுத்தி உள்ளனர்.





# 1200 ஆண்டுகள் பழமையான சிவலிங்கத்திற்கு திருக்குட நன்னீராட்டு பெருவிழா

மானாமதுரை, ஆக.3-
சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், கிளங்காட்டூர் கி.நெடுங்குளம் கிராமத்தில் அமைந்துள்ள 1200 ஆண்டுகள் பழமையான சிவலிங்கத்திற்கு இன்று கோவை அரண்பணி அறக்கட்டளை மற்றும் கி.நெடுங்குளம் கிராம பொதுமக்கள் இணைந்து தமிழில் வேத மந்திரங்களுடன் திருக்குட நன்னீராட்டு பெருவிழாவை சிறப்பாக நடத்தினர். விழாவை முன்னிட்டு சிறப்பு யாகங்கள், அபிஷேகம், அலங்காரம் மற்றும் தீபாராதனை நடைபெற்றது. இதில் கிராம பொதுமக்கள் மற்றும் ஏராளமான சிவனடியார்கள் கலந்து கொண்டு சிவபெருமானின் அருளைப் பெற்றனர்.

இந்த விழாவில், சுவாமிக்கு "திருமுறையில் கைருசாட்ரி மீனாட்சி உடனுறை சொக்கநாதர்" என்ற திருநாமம் சூட்டப்பட்டது.விழாவை சிறப்பாக நடத்தி வைத்த கோவை அரண்பணி அறக்கட்டளைக்கு கி.நெடுங்குளம் கிராம பொதுமக்கள் நன்றி தெரிவித்தனர்.

# ஒகேனக்கல்லில் தேமுதிக ஆர்ப்பாட்டம் கர்நாடக முதல்வர் சிவக்குமார் தமிழ்நாட்டிற்கு வர வேண்டும்: பிரேமலதா பேச்சு

தர்மபுரி, ஆக.3-
காவிரியில் மேகதாது அணை கட்ட முயற்சி செய்து வரும் கர்நாடகா அரசை கண்டித்து, தர்மபுரி மாவட்டம் ஒகேனக்கல்லில் தேமுதிக சார்பில் பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் எம்எல்ஏ தலைமையில் நேற்று ஆர்ப்பாட்டம் நடந்தது. இதில் சுதீஷ் எம்பி, விஜய பிரபாகரன் உள்பட பலர் பங்கேற்றனர். அப்போது பிரேமலதா பேசியதாவது: ராகுல்காந்தி சென்னைக்கு வந்துள்ளார்அப்படியே போய் முதல்வரை சந்தியுங்கள். தவெக கூட்டணியில் இருக்கீங்க. கர்நாடகாவில் ஆட்சி உங்க கட்சியோடது. தமிழ்நாட்டிற்கு தண்ணீர் பெற்று தருவது உங்கள் கடமை. ஆகஸ்ட் 3ம் தேதி, முதல்வர் விஜய் கர்நாடகா போக கூடாது என பலர் சொல்றாங்க. நான் சொல்றேன். முதல்வர் கர்நாடகாவுக்கு செல்ல வேண்டும். தமிழ்நாட்டின் உரிமையை நிலை நாட்ட வேண்டும். கர்நாடகாவுக்கு விஜய் வரக்கூடாது என சொல்லும் சிவக்குமார், தமிழ்நாட்டிற்கு வர வேண்டும். வீரப்பன் இப்போது இல்லாததால், கர்நாடகாவுக்கு குளிர்விட்டு போச்சு. இவ்வாறு அவர் பேசினார்.* சென்னையில் ஆய்வு செய்யும் விஜய் ஒகேனக்கல் வரணும்

பிரேமலதா அளித்த பேட்டியில், காவிரி பிரச்னையில் தமிழக முதல்வர், அனைத்து கட்சி கூட்டத்தை கூட்டி, பிரதமரை சந்தித்து வலியுறுத்த வேண்டும். காவிரி நீருக்காக பலமுறை நீதிமன்றத்திற்கு சென்றும் தீர்வில்லை. அதற்கு தான், முதல்வர் கர்நாடகா செல்ல வேண்டும் என்று சொல்கிறோம். உங்கள் சுயநலத்திற்காக மூகாம்பிகை கோயிலுக்கு செல்கிறீர்கள், ஏன் மக்களுக்காக போக கூடாதா?. முதல்வர் சென்னையில் ஆய்வு செய்கிறார். அவர் காவிரி ஆற்றை பார்க்க வேண்டும். ஒகேனக்கல், மேட்டூர் டெல்டா மாவட்டங்களுக்கு வர வேண்டும். தமிழகம் கடந்த காலங்களில் மின்மிகை மாநிலமாக இருந்தது. தற்போது மின்வெட்டு அதிகரித்துள்ளது. முதல்வர் பகுதியிலேயே மின்வெட்டு என மக்கள் ரோட்டுக்கு வந்து போராடுறாங்க. அதுமட்டுமில்லாமல் மின் கட்டணம் உயர்ந்துள்ளது. மின்வெட்டை சரி செய்து மின்கட்டணத்தை குறைக்க வேண்டும். முதல்வர் நிருபர்களை சந்தித்து பேச வேண்டும் என சட்டமன்றத்தில் வலியுறுத்துவேன் என்றார்.

# பொங்கலுக்கு ரேஷனில் 4 முழ வேட்டி தான்: அமைச்சர் விஜய்பாலாஜி திட்டவட்டம்

நாகர்கோவில், ஆக.3-
வருகிற பொங்கலுக்கு 4 முழ வேட்டிதான் வழங்கப்படும் என்று அமைச்சர் விஜய் பாலாஜி கூறினார். கன்னியாகுமரி மாவட்டம் ஆரல்வாய்மொழியில் செயல்பட்டு வரும் கூட்டுறவு நூற்பாலை மற்றும் நாகர்கோவில் வடசேரி பகுதியில் அமைந்துள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கம் ஆகியவற்றை நேற்று அமைச்சர் விஜய் பாலாஜி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அப்போது, மாநில கைத்தறி உயர்மட்டக்குழு முன்னாள் உறுப்பினர் பன்னீர்செல்வம் உள்ளிட்டோர், கன்னியாகுமரி மாவட்டத்தில் 32 கூட்டுறவு சங்கங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான நெசவாளர்கள் கடந்த 3 மாதங்களாக வேலையின்றி தவித்து வருகின்றனர். அரசு தற்போது 2027 பொங்கலுக்கு 4 முழ (2.00 மீட்டர்) வேட்டிகளை உற்பத்தி செய்ய உத்தரவிட்டுள்ளது. ஆனால், தற்போதுள்ள கைத்தறி மற்றும் பெடல் தறிகளில் இந்த புதிய மாற்றத்தை செய்ய ஒரு தறிக்கு சுமார் 11,000 முதல் 14,000 ரூபாய் வரை செலவாகும். சாதாரண நெசவாளர்களால் இந்தத் தொகையை செலவு செய்ய இயலாது. புதிய ரக உற்பத்திக்குக் கூலி குறைவாகவே கிடைக்கும் என்பதால் ,பெரும்பாலான நெசவாளர்கள் வாழ்வாதாரத்தை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று அமைச்சரிடம் தெரிவித்தனர்.

இது தொடர்பாக நிருபர்களிடம் கூறிய அமைச்சர் விஜய் பாலாஜி, வரும் பொங்கலுக்கு ரேஷன் கடைகளில் 4 முழ வேட்டிதான் வழங்கப்படும் என்றார். முன்னதாக ஆரல்வாய்மொழியில் கூட்டுறவு நூற்பாலையில் ஆய்வு செய்தபோது அங்கிருந்த தொழிலாளர்கள் அமைச்சரை முற்றுகையிட்டு, ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை வைத்தனர். இதனை முதலமைச்சர் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் விஜய்பாலாஜி தெரிவித்தார்.

# மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்காததால் வறண்ட காவிரியில் ஆடிப்பெருக்கு விழா: காவிரித் தாயே கை விரித்தாயே

திருச்சி, ஆக.3-
ஆடிப்பெருக்கு விழா நாளை கொண்டாடப்படுகிறது. வறண்ட காவிரியில் திருச்சி அம்மா மண்டபம், மயிலாடுதுறை காவிரி துலாகட்டம் உள்பட காவிரி கரையோரங்களில் பக்தர்கள் ஆடிபெருக்கை கொண்டாட ஷவர்கள் அமைப்பது உள்ளிட்ட ஏற்பாடுகள் தீவிரமடைந்துள்ளது. விவசாயம் செழிக்கவும், நாடு வளம் பெறவும் முக்கிய ஆதாரமான நீர்நிலைகளை போற்றி வழிபடும் ஆடிப்பெருக்கு விழா நாளை (3ம் தேதி) கொண்டாடப்படுகிறது. காவிரி கரையோர மாவட்டங்களில் ஆடிப்பெருக்கு விழா விமரிசையாக கொண்டாடப்படும். ஆடிப்பெருக்கன்று அதிகாலையில் எழுந்து காவிரி உள்ளிட்ட நீர்நிலைகளுக்கு சென்று பொதுமக்கள் நீராடி விட்டு கோயில்களுக்கு சென்று சாமி தரிசனம் செய்வர். இதைதொடர்ந்து ஆற்றின் படித்துறைகளில் இலை போட்டு அரிசி, தானியங்கள், பழ வகைகள் உள்ளிட்ட விளைபொருட்கள், காதோலை, கருகமணி உள்ளிட்ட மங்கள பொருட்களை வைத்து படையலிட்டு வழிபடுவர். புதுமண தம்பதியர் ஆற்றில் குளித்து புத்தாடை அணிந்து திருமணத்தன்று அணிவிக்கப்பட்ட மாலைகளை ஆற்றில் விடுவர். மேலும் சுமங்கலி பெண்கள் தங்களது மாங்கல்ய கயிறுகளை புதுப்பித்து கொள்வர். ஆண்களும் காவிரி தாயை வழிபட்டு கைகளில் மஞ்சள் கயிறு கட்டி கொள்வது வழக்கம்.ஆடிப்பெருக்கு விழாவுக்காக மேட்டூரில் இருந்து காவிரி ஆற்றில் தண்ணீர் திறக்கப்படும். இந்தாண்டு பருவமழை பொய்த்து போனதால் மேட்டூரில் இருந்து பாசனம், ஆடிப்பெருக்குக்கு தண்ணீர் திறக்கவில்லை. இதனால் திருச்சி அகண்ட காவிரி உட்பட நீர்நிலைகள் வறண்டு பாலைவனம் போல் காணப்படுகிறது. இருப்பினும் திருச்சியில் ஆடிப்பெருக்கு விழாவை பொதுமக்கள் உற்சாகமாக கொண்டாடும் வகையில் மாநகராட்சி சார்பில் பல்வேறு முன்னேற்பாடு பணிகள் செய்யப்பட்டு வருகிறது.



அந்தவகையில் அம்மா மண்டபம் படித்துறை முன்புறம் 1,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தொட்டிகள் 4 இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. ஆண்கள், பெண்களுக்கு தனித்தனியாக தலா 20 என 40 ஷவர்கள் அமைக்கப்பட்டுள்ளன. படித்துறையில் பெண்களுக்கு 10 இடங்களில் உடை மாற்றும் அறைகள் உள்ளன. 3 இடங்களில் ஒலிபெருக்கி அமைக்கப்பட்டுள்ளது. கருமண்டப படித்துறை, வீரேஸ்வரம் படித்துறை, கீதாபுரம் படித்துறைகளில் விளக்குகள் அமைக்கப்பட்டு வருகிறது.அம்மா மண்டபம் படித்துறை முதல் புதுத்தெரு சந்திப்பு வரை சாலையோர தடுப்பு அமைக்கப்பட்டு வருகிறது. அதேபோல் ஓடத்துறை படித்துறை, காந்தி படித்துறை, எஸ்எஸ் கோயில் படித்துறை, அய்யாளம்மன் படித்துறைகளில் முன்னேற்பாடுகள் பணிகள் செய்யப்பட்டு வருகிறது. மயிலாடுதுறை; மயிலாடுதுறையில் உள்ள பிரசித்தி பெற்ற காவிரி துலாக்கட்டத்தில் ஆடிப்பெருக்கு விழா ஆண்டுதோறும் விமரிசையாக கொண்டாடப்படும். மயிலாடுதுறை மட்டுமின்றி சுற்றுவட்டார கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் ஆயிரக்கணக்கானோர் துலாக்கட்ட காவிரியில் ஆடிப்பெருக்கை கொண்டாடுவர். இந்தாண்டு காவிரியில் தண்ணீர் திறக்காததால் மயிலாடுதுறை மாவட்டத்தில் காவிரி வறண்டு கிடக்கிறது. இதனால் ஆடிப்பெருக்கு தினமான நாளை பக்தர்கள் நீராட வசதியாக நகராட்சி நிர்வாகம் சார்பில் துலாக்கட்ட காவிரி கரையில் கட்டப்பட்டுள்ள புஷ்கர தொட்டியில் போர்வெல் மூலம் தண்ணீர் இறைத்து நிரப்பி வருகின்றது.

# கன்னியாகுமரியில் திரண்ட சுற்றுலா பயணிகள்

கன்னியாகுமரி,
ஆக.3-
சர்வதேச சுற்றுலாத் தலமான கன்னியாகுமரிக்கு தினந்தோறும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் என ஆயிரக்கணக்கானோர் வருகின்றனர். இவ்வாறு வரும் சுற்றுலா பயணிகள் திரிவேணி சங்கமத்தில் சூரிய உதயத்தை பார்த்துவிட்டு கடலில் புனிநீராடுவது வழக்கமாக இருந்து வருகிறது. இந்தநிலையில் இன்று வார விடுமுறை நாளை முன்னிட்டு காலை முதலே அதிகளவில் சுற்றுலா பயணிகள் கன்னியாகுமரிக்கு வர தொடங்கினர்.இதையடுத்து அவர்கள் திரிவேணி சங்கமத்தில் நின்றவாறு கடலில் இருந்து உதித்து வந்த சூரியனை கண்டு மகிழ்ச்சி அடைந்தனர். பெரும்பாலானோர் தங்களது செல்போன்களில் புகைப்படம் எடுத்து கொண்டனர். இதனை தொடர்ந்து அவர்கள் கடலில் புனிதநீராடிவிட்டு பிரசித்தி பெற்ற பகவதி அம்மன் கோயிலுக்கு சென்று நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர்.பின்னர் காந்தி, காமராஜர் மண்டபங்கள், காட்சி கோபுரம் உள்ளிட்ட இடங்களுக்கு சென்று சுற்றிபார்த்தனர். தொடர்ந்து காலை 8 மணிக்கு பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகத்தில் படகில் செல்ல டிக்கெட் பெற சென்றனர். இதற்கிடையே கன்னியாகுமரி கடலில் இன்று காலை முதல் திடீரென நீர்மட்டம்



தாழ்ந்தது. ஆகவே வழக்கமான நேரத்துக்கு தொடங்க வேண்டிய படகு போக்குவரத்து தொடங்கவில்லை. இதன் காரணமாக அலுவலக கேட் மூடப்பட்டு போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். படகு சேவை நிறுத்தத்தால் பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகத்துக்கு சென்ற சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடைந்தனர். ஏற்காடு, ஒகேனக்கல் சேலம் மாவட்டம் ஏற்காட்டுக்கு வெளிமாவட்டம், வெளிமாநிலங்களில் இருந்து நாள்தோறும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். வழக்கமாக தென்மேற்கு பருவமழை சீசனின் ‘ஜில்’ கிளைமேட்டை ரசித்து செல்வதில் ஆர்வம் காட்டுவார்கள். ஆனால், நடப்பாண்டு மழையில்லாமல் வெயிலின் தாக்கம் வாட்டி வதைத்தது. இந்நிலையில், நேற்று இரவு ஏற்காட்டில் பெய்த கனமழையால் குளிர்ந்த சீதோஷ்ண நிலை நிலவுகிறது. விடுமுறை நாளான இன்று காலையில் இருந்தே டூவீலர், கார் உள்ளிட்ட வாகனங்களில் ஏற்காட்டில் சுற்றுலா பயணிகள் குவிந்தனர். அவர்கள் லேடீஸ் சீட், ஜெண்ட்ஸ் சீட், பக்கோடா பாயிண்ட், தாவரவியல் பூங்கா, அண்ணா பூங்கா மற்றும் ஏரிப்பூங்கா, சேர்வராயன் மலைக்கோயில் உள்ளிட்ட பல்வேறு இடங்களை கண்டு களித்தனர்.பின்னர், குடும்பத்துடன், படகு இல்லத்தில் நீண்ட வரிசையில் காத்திருந்து படகு சவாரி செய்து மகிழ்ந்தனர். இதேபோல, தர்மபுரி மாவட்டம் ஒகேனக்கல்லுக்கும் பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்தனர். நீர்வரத்து 500 கனஅடியாக உள்ள நிலையில் அங்குள்ள மெயின் அருவி, சினி பால்சில் தண்ணீர் ஓரளவுக்கு தண்ணீர் வருகிறது. எண்ணெய் மசாஜ் செய்து கொட்டும் குறைந்த அளவு தண்ணீரில் சுற்றுலா பயணிகள் குளித்து மகிழ்ந்தனர். பின்னர், குடும்பத்துடனும், நண்பர்களுடனும் காவிரியாற்றில் பரிசல் சவாரி செய்து மகிழ்ந்தனர்.



# தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் நீர்வரத்து சீரான நிலையில் மெயின் அருவி, ஐந்தருவியில் குளிக்க அனுமதி

தென்காசி, ஆக.3-
தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் நீர்வரத்து இன்று சீரான நிலையில் மெயின் அருவி, ஐந்தருவியில் குளிக்க அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது. குற்றால அருவிகளில் கடந்த சில வாரங்களாக நீர்வரத்து மிகக்குறைந்த அளவிலேயே இருந்தது. இதற்கிடையே, மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய பகுதிகளில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. இதனால் கடந்த 30 ந்தேதி அருவிகளில் நீர்வரத்து அதிகரித்ததை தொடர்ந்து, சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டது. இதனையடுத்து அன்று மாலையில் நீர்வரத்து சீரானதை தொடர்ந்து குளிக்க அனுமதி வழங்கப்பட்டது.

இதனையடுத்து, குற்றாலம் மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதிகளில் நேற்று முன்தினம் மழை பெய்தது. இதனால் மெயின் அருவி மற்றும் ஐந்தருவியில் தண்ணீர் வரத்து அதிகரித்ததையடுத்து சுற்றுலா பயணிகள் குளிக்க மீண்டும் தடை விதிக்கப்பட்டது. இந்த நிலையில், தொடர்மழை காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் குற்றாலத்தில் அனைத்து அருவிகளிலும் குளிக்க 2வது நாளாக நேற்றும் தடை விதிக்கப்பட்டது. இதனால், விடுமுறை நாளில் ஆவலுடன் நீராட வந்த சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடைந்தனர்.

இந்த நிலையில், குற்றாலத்தில் நீர்வரத்து இன்று சீரானது. இதனால், 2 நாட்கள் தடைக்கு பின்னர் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதி அளிக்கப்படுகிறது. இதன்படி, தென்காசி மாவட்டம் குற்றாலம் மெயின் அருவி மற்றும் ஐந்தருவியில் குளிப்பதற்கு சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது. இதனால், சுற்றுலாவாசிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# தமிழகத்தில் பூரண மதுவிலக்கு கோரிய மனு தள்ளுபடி

மதுரை, ஆக.3-
தமிழகத்தில் பூரண மதுவிலக்கு அமல்படுத்தப்படுத்த கோரிய மனுவை தள்ளுபடி செய்து ஐகோர்ட் கிளை உத்தரவிட்டுள்ளது. விருதுநகரை சேர்ந்த காந்திராஜன், ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த சீராய்வு மனு: தமிழ்நாட்டில் பூரண மதுவிலக்கு அமல்படுத்தப்படும் என பல்வேறு அரசியல் கட்சிகள் வாக்குறுதிகள் அளித்து உள்ளன. ஆனாலும் இங்கு பூரண மதுவிலக்கு அமல்படுத்தப்படவில்லை. மது அருந்தும் பழக்கம் உள்ளவர்களால் விபத்துகள், நோய்கள், கொலை உள்ளிட்ட குற்றங்கள், தற்கொலைகள் போன்ற சம்பவங்களால் லட்சக்கணக்கானவர்கள் ஆண்டுதோறும் இறக்கின்றனர்.எனவே தமிழ்நாட்டில் பூரண மதுவிலக்கு அமல்படுத்த உத்தரவிட வேண்டும் என ஏற்கனவே வழக்கு தொடர்ந்தேன். அந்த வழக்கை விசாரித்த ஐகோர்ட், மதுவிலக்கு என்பது ஒரு அரசின் கொள்கை சார்ந்த முடிவு எனக் கூறி தள்ளுபடி செய்தது. எனவே, அந்த உத்தரவை மறுபரிசீலனை செய்து எனது கோரிக்கையை நிறைவேற்றுமாறு அரசுக்கு உத்தரவிட வேண்டும். இவ்வாறு கூறியிருந்தார். இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் சி.வி.கார்த்திகேயன், ஆர்.சக்திவேல் ஆகியோர், மனுதாரர் கோரும் விவகாரம் அரசின் கொள்கை முடிவு சார்ந்தது. இதில் எந்தவித நிவாரணத்தையும் இந்த நீதிமன்றத்தால் வழங்க இயலாது எனக்கூறி மனுவை தள்ளுபடி செய்தனர்.




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161